முருகப்பெருமான் துணை

# மகான் கமலமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

30.07.2021, வெள்ளிக்கிழமை

1. தவமெனும் மகா சக்தி கொண்டு
   தண்டாயுதனின் தயவை பெற்று
   அவதாரம் அவன் சூட்சுமமாகவே
   அற்புதம்பட கண்ட அரங்கனே
2. அரங்கனே உன்பலம் உலகறிய
   ஆற்றலான மாற்றம் அடையுமென
   வரங்களாக துல்லிய ஆசிதனை
   வழங்குவேன் பிலவ நள்ளி திங்கள்
3. திங்களிலே முன்னான்கீர்திகதி புகர்வாரம்
   (பிலவ வருடம் ஆடி மாதம் 14ம் நாள், 30.07.2021 வெள்ளிக்கிழமை)
   தேசிகனுக்கு கமலமுனிவர் யானும்
   ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
   ஓங்கார குடில் படைத்தருளும் ஞானி
4. ஞானியரின் வழி வருகின்ற
   நல் மாந்தர்கள் அனைவரும்
   ஞானிகளாகும் படி வரம்தனை
   ஞானதேசிகன் கரம்பட ஆறுமுகனார்
5. ஆறுமுகனார் தீட்சை சக்தியாக
   அருளி மக்களை தேற்றி
   ஏறுமுகம் காண வகையாக்கி
   எந்நாளும் செபதபம் செய்திட
6. செய்திட சிறப்பறிவு கூட்டி
   சிந்தை கலந்து அற்புதம் நடத்த
   அய்யனே அரங்கனே முருகனே என
   அனைத்திலும் சரணடைவு கொண்ட
7. கொண்ட மக்கள் அனைவரும்
   குருவருள் பிசகா வண்ணம்
   தொண்டர்களாகத் தொடர்ந்து இனி
   தெய்வபலம் பெற்று உயர்வர்
8. உயர்வும் தயவும் மிக்க ஞானி
   உலகினில் சிறந்த மகாகுரு
   தயவான அரங்கமகா ஞானியே
   தரணியோர் தேடிக் கண்டு

9. கண்டுமே துறையூர் மண்ணில்
காலடி பதித்து தரும சேவையான
தொண்டில் கலந்து இணைந்து
தேசிகன் பால் தீட்சை அடைந்து

10. அடைந்துமே சைவ நெறிபட
அகிலத்தார் சரவணச் சுடரேற்றி
தடையற முருகப் பெருமானின்
தக்க வழிபாட்டை தொடர

11. தொடர ஞான வாழ்வாக
திருவருள் பாதுகாப்பு பெருகி
இடரோ பேரிடரோ அனுகாத
ஏகாந்த பேரின்ப நிலை அடைவர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–